# தமது மக்களுக்குப் போதிப்பதற்காகக் கர்த்தர் ஏசாயாவை ஆயத்தப்படுத்தினார்

### ஏசாயா-பரலோகத்துக்குள் பார்த்த தீர்க்கதரிசி

**ஜெபம் :** "அன்பான கர்த்தாவே! ஏசாயா தீர்க்கதரிசியைப் போல உமது மகத்துவத்தையும் பரிசுத்தத்தையும் நாங்களும் காணவும், அவனைப் போல நாங்களும் உமக்கு முன்பாக எங்களைத் தாழ்த்தவும், உமது பரிசுத்த மாக்குதலை ஏற்றுக்கொள்ளவும், உமக்கு சேவை செய்ய எங்களை அளிக்கவும் கிருபை செய்யும்."

சிறுவர்கள் வயதுக்கும் தேவைக்கும் ஏற்ற நடவடிக்கைகளைத் தெரிந்து கொள்ளவும்.

**ஏசாயா 6:1-8** ல் கூறப்பட்டுள்ள கதையான, கர்த்தர் எவ்விதம் ஏசாயாவை பரலோகத்திற்குள் பார்க்க அனுமதித்தார் என்பதையும், பண்டைய இஸ்ரவேல் மக்களுக்கு தேவ வார்த்தையை போதிக்க அதன்பின் எவ்வாறு அனுப்பினார் என்பதையும் வாசித்தோ அல்லது மனப்பாடமாகவோ கூறவும்.

**இந்தக் கேள்விகளைக் கேட்கவும்:**

- ஏசாயா எங்கு கர்த்தரைப் பார்த்தான்? *(வச. 1)*
- கர்த்தருக்கு மேலாகப் பறந்தவை யாவை? *(வச. 3. சேராபீன்கள்: பெரிய தூதர்கள்)*
- சேராபீன்கள் சத்தமிட்டுக் கூறியது என்ன? *(வச. 3)*
- தூதர்கள் பாடியபோது ஆலயத்ததுக்கு என்ன நேர்ந்தது? *(வச. 4)*
- இது நிகழ்ந்த போது ஏசாயா எவ்வாறு உணர்ந்தான்? *(வச. 5)*



- ஏசாயா ஏன் பயந்தான்? *(வச. 5)*
- ஏசாயாவின் உதடுகள் எவ்வாறு சுத்தமாக்கப்பட்டன? *(வச. 6-7)*
- ஏசாயாவிடம் தூதன் கூறியது என்ன? *(வச. 7)*
- கர்த்தர் ஏசாயாவிடம் என்ன கேட்டார்? *(வச. 8)*
- ஏசாயா என்ன பதில் கூறினான்? *(வச. 8)*
- ஏசாயாவுக்கு செய்தது போல தேவன் நமது பாவங்களை மன்னித்து நம்மையும் ரிசுத்தமாக்க வேண்டியது அவசியமா?
- அவரைப் பற்றி ஜனங்களுக்கு சொல்ல யாரை அனுப்புவேன் என்று தேவன் கேட்டால் நமது பதில் என்னவாக இருக்க வேண்டும்?

தமது வார்த்தையைப் போதிக்கக் கர்த்தர் ஏசாயாவை எவ்வாறு ஆயத்தப்படுத்தினார் என்ற கதையை நாடகம் ஆக்குக (ஏசா. 6:1-8)

- இந்தக் கதையை சிறுவர்கள் நாடகமாக நடிக்க சபையின் ஆராதனைத் தலைவருடன் பேசி ஏற்பாடு செய்யவும்.
- உங்கள் கற்பிக்கும் நேரத்தை சிறுவர்களுடன் செலவிட்டு இந்த நாடகத்தை ஆயத்தமாக்க உதவுங்கள்.
- எல்லா பகுதிகளையும் பயன்படுத்தத் தேவை இல்லை.
- பெரிய பிள்ளைகள் சிறுவர்களுக்கு உதவவும்.
- ஏசாயா, தேவ குரல், கதைகூறுபவர் பகுதிகளை பெரியவர்களோ பெரிய குழந்தைகளோ ஏற்கலாம். (கதை கூறுபவர் கதை சுருக்கத்தைக் கூறுவதோடு, நடிப்பதையும் பேசுவதையும் சிறுவர்களுக்கு ஞாபகப்படுத்துபவர்).
- சிறிய குழந்தைகள் சேராபீன்களாக நடிக்கலாம். சிவந்த நெருப்புத் தழலைக் குறிக்க ஏதாவது ஒன்றை கண்டுபிடிக்கவும் அல்லது ஆயத்தம் செய்யவும்.

## பகுதி - I

**கதை கூறுபவர்** ஏசாயா 6:1-7 லிருந்து கதையின் முதல் பகுதியைக் கூறவும். பின் கூற வேண்டியது, ஏசாயா சொல்லுவதைக் கேளுங்கள்

ஏசாயா (கைகளை கண்களின் மேல் வைத்து சத்தமாகச் சொல்லுதல்)

நான் கர்த்தரை அவரது ஆலயத்தில் பார்க்கிறேன்!
அவரது மகிமை எங்கும் நிறைந்திருக்கிறது!
பெரிய தூதர்கள் அவரது சிம்மாசனத்தைச்
சுற்றிலும் பறக்கின்றனர்!
ஆலயம் அசைகிறது! அது புகையால்
நிரம்புகிறது!
நான் பாவி! எனவே இது என்னை
பயமுறுத்துகிறது!

**கதை கூறுபவர் :** "பெரிய சேராபீன்கள் பாடுவதைக் கேளுங்கள்"

சேராபீன்கள் (பையன்கள்) பாடலாம் அல்லது இராகம் போட்டு வாசிக்கலாம். "பரிசுத்தர், பரிசுத்தர், சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர்."

சேராபீன்கள் (பெண்பிள்ளைகள்): "உலகம் எல்லாம் அவர் மகிமையால் நிறைந்திருக்கிறது."

(தேவனுடைய பரிசுத்தத்தைப் பற்றி பாடல் பாட சிறுவர்களை ஆயத்தம் செய்யலாம்).

**ஏசாயா :** "கர்த்தாவே! நான் அசுத்தமானவன்! என்னுடைய ஜனங்கள் பாவிகள்! உமது சமூகத்தில் என்னால் நிற்க முடியாது!"

**ஒரு சேராபீன் :** நெருப்புத் தழலை எடுத்துக் கொண்டு ஏசாயாவிடம் பறந்து வருவது போல் பாவித்தல். தழலால் அவனது வாயைத் தொட்டு, சத்தமாக, "தேவன் உன்னை மன்னிக்கிறார். உன் பாவத்தில் இருந்து உன்னைக் கழுவினார். எல்லாம் இப்போது போய்விட்டது."

## பகுதி - 2

**கதை கூறுபவர் :** வசனம் 8 லிருந்து கதையின் இரண்டாம் பகுதியைக் கூறவும். பின் "கர்த்தர் சொல்வதைக் கேளுங்கள்."

**தேவ குரல் :** எனக்கு ஒரு தூதுவன் தேவை. யார் போய் மக்களுக்கு போதிப்பார்கள்?

**ஏசாயா :** இதோ நான் இருக்கிறேன்! என்னை அனுப்பும்.

**கதை கூறுபவர் :** நாடகத்துக்கு உதவிய யாவருக்கும் நன்றி கூறுகிறார்.

**கேள்விகள் :** குழந்தைகள் பெரியவர்களுக்கு இக்கதையை நடித்துக் காட்டினால், மேலே பட்டியலில் இடப்பட்டுள்ள கேள்விகளையும் கேட்கவும்.

**நடைமுறை விளக்கம் :** பென்சில், காகிதம், தீப்பெட்டி ஆகியவைகளை எடுத்துக் கொள்க. சிறுவர்களைக் கேட்கவும்.

- தேவனுக்கு முன்பாக நம்மை அசுத்தம் செய்பவை யாவை? சிறுவர்கள் கூறுவதை எழுதவும்.
- பாவத்தை நாம் எவ்வாறு அகற்றலாம்? காகிதத்தை எரிக்கவும். தேவன் பாவமற நம்மை சுத்திகரிக்கிறார் என்பதை விளக்கவும்.

**கேட்க வேண்டியது:** பரலோகத்தில் சேராபீன்கள் பாடுவது போல, தேவனை அவரது மகத்துவத்துக்காகவும் பரிசுத்தத்துக்காகவும் போற்றித்துதிக்கும் படியான சில பாடல்கள் யாவை?

(சிறுவர்கள் சில பாடல்களை கூறி அவற்றைப் பாடலாம்).

எரியும் தழலின் படத்தை **வரைக.** பெரியவர்களுக்கு ஆராதனையின் போது இப் படத்தைக் காட்டி தேவன் எவ்வளவு தூய்மையும் பரிசுத்தர் என்பதையும், நெருப்பு தங்கத்தை சுத்தகரிப்பதைப் போல நமது பாவத்தில் இருந்து அவர் நம்மை சுத்திகரிக்கிறார் என்பதையும் இது காட்டுகிறது என விளக்கவும்.



சங். 51:10 ஐ **மனனம் செய்க.**

**கவிதை :** சங். 63:1-3 ஐ மூன்று சிறுவர்கள் ஆளுக்கு ஒரு வசனமாய் ஒப்புவிக்கட்டும்.

தேவனே, நீர் என் தேவன் அதிகாலமே உம்மைத்
தேடுகிறேன். வறண்டதும் விடாய்த்ததும்
தண்ணீரற்றதுமான நிலத்திலே என் ஆத்துமா
உம்மேல் தாகமாய் இருக்கிறது. என்
மாம்சம் உம்மை வாஞ்சிக்கிறது.
இப்படியே பரிசுத்த ஸதலத்தில் உம்மைப் பார்க்க
ஆசையாய் இருந்து, உமது வல்லமையையும்
உமது மகிமையையும் கண்டேன்.
ஜீவனைப் பார்க்கிலும் உமது கிருபை நல்லது;
என் உதடுகள் உம்மைத் துதிக்கும்.

**பெரிய பிள்ளைகள்** தேவனுடைய பரிசுத்தத்தைப் பற்றி ஒரு கவிதையோ பாடலோ எழுதட்டும்.

அதில் பெரிய தூதர்கள் பரலோகத்தில் அவரை எவ்வாறு துதிக்கிறார்கள், அவர் எவ்வாறு நம்மை பரிசுத்தப்படுத்துகிறார், அதனால் அவரை நாம் சேவை செய்ய முடிகிறது என்பதை அவர்கள் எழுதலாம்.

**ஜெபம்:** கர்த்தாவே! உமது மத்துவத்தையும் பரிசுத்தத்தையும் நாங்கள் ஏசாயாவைப் போல போற்றுகிறோம். அவர்களோடு சேர்ந்து உம்மைப் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர் என்று போற்றுகிறோம். உமது பரிசுத்தம் நாங்கள் எவ்வளவு அசுத்தமானவர்கள் என்பதை உணர வைக்கிறது. எங்களை மன்னித்துப் பரிசுத்தப்படுத்தும். இயேசுவின் நாமத்தில் நன்றி சொல்கிறோம்.

Copyright © 2004 by Paul-Timothy. May be freely copied.
Download from www.Paul-Timothy.net